**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**
**ந.க.எண். 4116/ஆ5/2025, நாள்.10.09.2025**

.....

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – தென்னிந்திய அறிவியல் நாடக விழா 2025 (Southern India Science Drama Festival 2025) – 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு – மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா நடைபெறுதல் – சார்பாக |
| பார்வை | சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப் பணித்திட்டம்) கடித ந.க.எண்.047568/எம்2 /எஸ்2 / 2025, நாள். 08.08.2025 |

.....

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (நாட்டுநலப்பணித்திட்டம்) கடிதத்தில், நவம்பர் 2025 மாதத்தில் பெங்களூரு விஸ்வேஸ்வராயா தொழில் மற்றும் தொழில் நுட்ப அருங்காட்சியத்தில் தென்னிந்திய அறிவியல் நாடக விழா நடத்தப்படும் எனவும் இது தொடர்பாக பள்ளிகளில் 6 முதல் 10ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா 2025 (Science Drama Festival 2025) நடத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா (Science Drama Festival 2025) கீழ்காணும்படி நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

**மாவட்ட அளவிலான அறிவியல் நாடக விழா (Science Drama Festival 2025)**
**நாள்– 19.09.2025 (வெள்ளிக்கிழமை)**
**நேரம் – காலை 9.30 மணி**
**இடம் – ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல் நிலைப்பள்ளி, வேலூர்.**

**அறிவியல் நாடகப் போட்டிக்கான விதிகள் மற்றும் வழிகாட்டுதல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டு விவரங்களை மாணவர்களுக்கு தலைமையாசிரியர்கள் / ஆசிரியர்கள் மூலமாக தெரியப்படுத்த வேண்டும். மாவட்ட அளவிலான அறிவியல் நாடகப் போட்டியில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அறிவியல் நாடக விழா 2025–ல் பங்கேற்பார்கள்.**

மாநில அளவில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெறும் மாணாக்கர்கள் பெங்களூரில் நடைபெறும் தென்னிந்திய அளவிலும், தென்னிந்திய அளவில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெறும் மாணாக்கர்கள் கொல்கத்தாவில் நடைபெறும் தேசிய அளிவில் பங்கேற்பார்கள்.

The main theme for National Science Drama Festival 2025 is Science & Technology for the Benefit of Mankind. The Sub-themes are as follows:

- Women in Science
- Smart Agriculture
- Digital India : Empowering Lives
- Hygiene for All
- Green Technologies

எனவே, மேற்காணும் படி குறிப்பிட்டுள்ள நாளில் நடைபெறும் மாவட்ட அளவிலான அறவியல் நாடக விழாவில் ஒரு அறிவியல் வழிகாட்டி ஆசிரியருடன் தவறாமல் மாணவர்கள் கலந்துகொள்வதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலை / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு

1. பார்வையின் கடித நகல்
2. விதிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தொடக்கக் கல்வி / தனியார் பள்ளிகள்)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)
2. தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
   அனைத்து வகை நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் தனியார் பள்ளி தாளாளர்கள்.
   வேலூர் மாவட்டம்.

நகல் –

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (நாட்டுநலப்பணித்திட்டம்) அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.